என்றார்கள். ஆனால் மத்திய அரசோ நமக்கு எத்தனையோ வரிகளை விதித்து வசூல் செய்து வருகிறது, அப்படி இருக்க மத்திய அரசு இடங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அவைகள் எல்லாம் மத்திய அரசாங்கத்தின் சொத்தாக இருக்கிற காரணம் தான்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இப்போது ரயில்வேக்களுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய சொத்துக்களுக்கு நகரசபை வரி வசூல் செய்து வருகிறது. அரசுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய பஸ் களுக்கு வரி விதித்து வருகிறோம். மத்திய அரசுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய இந்தச் சொத்துக்களுக்கு வரி விதித்தால் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஏற்கனவே இருந்த சட்டத் தில் அப்படி விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதன்படியே இப்போது விதிவிலக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

தூர்வாரி புனரமைக்கும் இயந்திரங்கள்

* 453 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஏரிகளில் தூர் எடுக்கும் கருவிகள் கோவை மாவட்டத் திற்கு எப்போது கொண்டு வரப்படும்?

(இ) இதுவரை எந்த எந்த மாவட்டங்களில் மேற்படி கருவி தூர் எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) தற்சமயம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 6 குளங்களை தூர்வாரி புனரமைக் கும் திட்டங்கள் ஆய்வில் உள்ளன. ஆய்வு முடிந்ததும் ஆவன செய்யப்படும்.

(இ) தூர் வாரி புனரமைக்கும் இயந்திரங்கள் கீழ்க்கண்ட மாவட்டங்களில் வேலை செய்துள்ளன—

(1) செங்கற்பட்டு.
(2) வடஆற்காடு.
(3) தென் ஆற்காடு.
(4) திருச்சிராப்பள்ளி.
(5) மதுரை.
(6) இராமநாதபுரம்.
(7) திருநெல்வேலி.

திரு. சு. துரைசாமி: கோவை மாவட்டத்தில் ஏராளமான ஏரிகள் தூர் எடுக்கப்படாமல் இருக்கின்றன. விரைவில் அங்கே தூர் எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே நான் குறிப்பிட்டதுபோல் சில குளங்கள் தூர் எடுப்பது ஆய்வில் உள்ளன. ஆய்வு முடிந்தவுடன் தேவையான இடங்களில் எல்லாம் இந்தப் பணி மேற்கொள்ளப்படும்.

திரு. க. உரோ. எட்மண்ட் : நெல்லை மாவட்டத்தில் தூர்வாரி இயந்திரங்கள் வேலைசெய்வதாகச் சொன்னார்கள். எந்த எந்தக் குளங்கள் அவ்வாறு தூர்வாரப்பட்டிருக்கின்றன? தூர்வாரப் படாத குளங்கள் உடனடியாகத் தூர்வாரப்படுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எந்த எந்தக் குளங்கள் தூர்வாரப்பட்டிருக்கின்றன என்கிற விவரம் இல்லை. எந்த எந்த குளங்கள் தூர்வாரப்படவேண்டும் என்பதாக மாவட்ட நிர்வாகப் பொறியாளரால் கொடுக்கப்படுகிற விவர அடிப்படையில் ஆராயப்பட்டு பணிகளை அரசு மேற்கொள்ளுகிறது.

வேலூர் வட்டம் சதுப்பேரி ஏரி

* 454 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூர் தாலுக்கா சதுப்பேரி ஏரி எப்போது மராமத்து செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வேலூர் வட்டம், சதுப்பேரி ஏரி 1969–70-ல் மராமத்து செய்யப்பட்டது.

திரு. கே. எ. வகாப் : வேலூரில் குடிதண்ணீர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிற காரணத்தினால் அந்த ஏரியை தூர் எடுத்தால் மிகவும் உதவியாக இருக்கும். இதை உத்தேசித்தாவது அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த ஏரியின் கரையை உயர்த்துவதற்காக 33 ஆயிரம் ரூபாயும், ஆற்றுக்கால் வாய்க்கால்களை சரிப்படுத்த 41,200 ரூபாயும், வெள்ளத்தடுப்பு நடவடிக்கைக்காக 18,400 ரூபாயும் செலவிடப்பட்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டம் ஆற்றுப் பாசனம் இல்லாத மாவட்டம். ஏரிகளை மட்டும் நம்பியிருக்கிற மாவட்டம். ஏரிகளைத் தூர் வாருவதற்கு ஒதுக்கப்பட்ட பணம் போதவில்லையென்று சொல்கிறார்கள். அந்த மாவட்டத்திலுள்ள ஊர்களும் "சதுப்பேரி", "நாகனேரி" போன்றவைகளாகவே இருக்கின்றன. ஆகவே, அந்த மாவட்டத்திலுள்ள ஏரிகளில் தூர் வாருவதற்கு நிறையப் பணம் ஒதுக்கித்தர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?